DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.187/2020**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence :

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாபு | | : |
| த/பெ | : ஜெயராமன் | மதம் | : |
| கிராமம் | : முகப்பேர் | தொழில் | : வியாபாரம் |
| வட்டம் | : சென்னை | வயது | : 57/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி -22.10.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**: PW1

1. இவ்வழக்கின் 4 காசோலைகள் அன்றைய தேதியிலேயே முதலாவதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உடனடியாக மேற்படி காசோலைகள் திருப்பப்பட்டது என்றால் சரிதான். முதல் முறை திருப்பப்பட்ட போது அன்றைய தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். இரண்டாவது முறை காசோலை வங்கியில் செலுத்துவதற்கு முன்பாக எழுத்து பூர்வமாக எதிரிக்கு 14.03.2020 தேதியிட்ட ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **(எ.ம.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு எதிரி சமரச தீப்பாயம் மூலம் அணுக வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு நான் முடியாது என்று 17.03.2020 தேதியிட்ட ஒரு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் **(எ.ம.சா.ஆ.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.02.2020 இவ்வழக்கின் காசோலைகள் வங்கியில் செலுத்தினேன் என்றால் சரிதான். அது திருப்பப்பட்ட பின்பு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பு.சா.ஆ.11 வழக்கறிஞர் அறிவிப்பின் 3 வது பத்தியில் Show Room ல் கார்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 பத்தி 3 ல் 4 காசோலைகள் பிணையாக எதிரியிடமிருந்து வாங்கப்பட்டதாக

கூறியுள்ளேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 பத்தி 2ல் Show Room ல் கார்கள் எதுவும் விற்கப்படவில்லை என்று வருந்துவதாக கூறியிருந்தேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 பத்தி 3 ல் Show Room ல் வாடிக்கையாளர் கேட்ட 2 அல்லது 3 கார்கள் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. 2020 பிப்ரவரி மாதத்தில் திருவள்ளூர் மாவட்ட ஏனம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் எதிரி மீது மத்திய குற்றப்பிரிவில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் மீது விசாரணை செய்யாமல் இருந்ததால் மேல் முறையீடு செய்து வேறு ஒரு விசாரணை அதிகாரி மூலம் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் புகாரை பெற்று உச்சநீதிமன்றத்தின் மேற்கோள்களை காட்டி பின் புகாரை பதிவு செய்தார்கள். எதிரி முன் ஜாமீன் பெற உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் நான் இடையீட்டு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பு.சா.ஆ.13 ஆவணத்தில் எதிரியை கைது செய்து குண்டாஸ் சட்டத்தின் கீழ் நீதிமன்ற காவலில் உட்படுத்தப்பட்டார் என்று காணப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் மீது போடப்பட்ட இறுதி அறிக்கையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது வரை நான் கொடுத்த புகார் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இந்த காசோலை வழக்கு விவரங்கள் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி உத்தரவாதத்திற்காக தான் காசோலை கொடுத்தார் என்றும் கடனுக்காக காசோலை தரவில்லை என்றால் சரியல்ல. எதிரியுடன் கூட்டுவணிகம் செய்த காலமானது கோவிட் காலம் என்பதால் இலாப நஷ்டங்களை பகிர்ந்து கொள்ள இயலவில்லை என்றால் சரியல்ல. வியாபாரத்தில் கார்கள் மீது செய்த முதலீட்டினை மீட்பதற்காக எதிரி மீது அரசியல் ரீதியாகவும் மற்றும் பல்வேறு வகைகளில் அழுத்தம் கொடுத்து கார்களை எதிரி உடனே விற்கமுடியாமல் நிறுவனத்தை மூடும் நிலைமைக்கு ஆலாக்கி விட்டேன் என்றால் சரியல்ல.

3. எங்களிடையே நடந்த வணிகத்திற்கு பின்பு எதிரி அந்த இடத்தில் வியாபாரம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களிடையே வியாபாரம் சரியாக நடந்து வந்ததாகவும், இடையே ஏற்பட்ட கோவிட் காரணத்தினால் நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தொடர்ந்து கொடுத்த அழுத்தத்தினால் தேதியிடப்படாத காசோலை எதிரி கொடுத்ததை வைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களிடையே நடந்த வியாபார நஷ்டம் என்பதால் அதற்கு நான்

உரிமையியல் வழக்கு தான் நாடியிருக்க வேண்டும் குற்ற வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் எந்த ஒரு பணப்பலன் இல்லாததால் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது நிறுவனமானது சட்டப்படி பதிவு செய்யப்படாத நிறுவனம் என்பதாலும் கூட்டு பங்குதாரருடன் சேர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் நான் தனியாக இவ்வழக்கு தாக்கல் செய்ததால் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி குற்றமற்றவர் என்றும் அவரை அலகழிக்க வேண்டும் என்ற நோக்கத்தினால் இப்பொய் வழக்கு அவர் மீது தாக்கல் செய்ததால் நான் அவருக்கு நஷ்ட ஈடு தரவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Digitally signed by
Tmt.K.Mahasakthi.B.B.A.,L.L.B.,(Hons)